18.10.2022 அ.வ.எண்.106/2013

வா.சா.1, மணிமாறன்

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) நான் 9ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தாவா சொத்தில் குடியிருக்கவில்லை முகப்பேரில் வசித்து வருகிறேன். தாவா சொத்து 4125 சதுர அடி என்று சொத்து விவரத்தில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். தாவா தாக்கல் செய்யும் போது தாவா சொத்தில் என்ன பயன்பாட்டில் இருந்தது என்பதை குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் அதில் குடிசை வீடு இருந்தது. தாவா சொத்து விவரத்தில் மேற்படி குடிசை வீடு பற்றி குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். மேற்படி குடிசை வீட்டிற்கு தாவா தாக்கல் செய்த தேதியில் மின்சார இணைப்பு இல்லை.

2) வா.சா.ஆ2 ஆவணம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு அதில் சொத்து விவரத்தில் வீடு கட்டும் காலி மனை என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். தாவா வாதுரையில் என்ன தேதியில் யாரால் மேற்படி நான் சொன்ன குடிசை வீடு கட்டப்பட்டது என்ற விவரம் குறிப்பிட்டு சொல்லவில்லை அங்கு அவ்வாறு வீடு எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்த எனது முதல் விசாரணை வாக்கு மூலத்திலும் நான் சாட்சியத்தில் சொல்லும் குடிசை வீடு பற்றி சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தை சுற்றி இரும்பு கம்பி சுற்றிய கல்லுகால் நடப்பட்டுள்ளது. இதை பற்றியும் தாவாவிலோ தாவா வாதுரையிலோ பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை.

3) வடக்கில் உள்ள சாலை எங்களது நிலத்தில் போடப்படவில்லை நாங்கள் எதுவும் இடம் விட்டு கொடுக்கிவில்லை. தாவா சொத்திற்கு வடக்கு பக்கம் உள்ள சாலை ராஜம்மாள் நகர் லேஅவுட் போட்டவர்கள் போட்ட 20 அடி சாலை. ராஜம்மாள் நகர் லேஅவுட்டின் விஸ்திரணம் மற்றும் அதன் உரிமையாளர்கள் யார் என்ற விவரம் எனக்கு தெரியாது. 1991 ல் தாவா சொத்தானது எனது தாயாருக்கு பதியப்படாத கிரைய ஆவணம் வா.சா.ஆ2 மூலம் பெறப்பட்டதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளோம். மேற்படி ஆவணத்தை திரு.ஜெயவேல் என்பவர் எனது தாயாருக்கு எழுதி கொடுத்தார். மேற்படி ஆவணத்தில் 15ஏக்கர் 12 சர்வே எண்களில் திரு.ஜெயவேல் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு சொந்தமானது என்று குறிப்பிட்டு

உள்ளத்தில சர்வே எண்.16/1 குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் சொத்து விவரத்தில் மட்டும் தான் சர்வே எண் 16/1 விற்கப்படுகிறது என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்த வா.சா.ஆ1 முதல் 4 ஆவணங்களை தவிர்த்து திரு.ஜெயவேல் மற்றும் அவரது குடும்பத்தாற்கு தாவா சொத்து பாத்தியப்பட்டது என்று சொல்லும் ஆவணங்களை நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

4) தாவா சொத்திற்கு ஆன பட்டா வா.சா.ஆ3 எனது தாயார் பெயரில் 15.06.2016 வழங்கப்பட்டது. அதில் செங்கை மாவட்டம், சைதாபேட்டை தாலுக்கா என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ4 சிட்டா மற்றும் அடங்கலில் சர்வே எண்16/1 வீட்டு மனைகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது, அந்த ஆவணம் டிபிடி தாசில்தார் அம்பத்தூர் அவர்களால் வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

5) பிரதிவாதி ஏஜென்சி என்ற பெயரில் கிணற்றுக்கு போடக்கூடிய சிமெண்டு உரைகளை தயாரித்து அங்கே வீடும் கட்டி வசித்து வருகிறார் அது என் தாவா சொத்திற்கு தெற்கில் உள்ளது. பிரதிவாதியின் சொத்து பெரிய விஸ்திரணம் கொண்டது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது 1600 சதுர அடி மட்டும் தான் அவர் கிரையம் வாங்கினார். 2013ல் நான் தாவா தாக்கல் செய்யும் போது பிரதிவாதி அவரது இடத்தில் குடியிருந்து வணிகம் செய்து வந்தார். தாவா சொத்தை விவரித்து கூறும் போது தெற்கில் பிரதிவாதியின் இடம், வீடு உள்ளதாக குறிப்பிடாமல் சுந்தர் என்பவரின் இடம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன்.

6) வடக்கு பக்கத்தில் லேஅவுட் காரணங்களுக்காக சாலையை விவரிவாக்கம் செய்யும் போது எனது சொத்தில் ஒரு பகுதியை நான் பதியப்படாத கிரைய ஆவணம் மூலம் விற்றேன் என்று சொன்னால் சரியல்ல. ராஜம்மாள் நகரின் ஒரு பகுதிதான் தாவா சொத்து என்பதற்கோ அல்லது ராஜம்மாள் நகர் லேஅவுட் போட்டவர்களிடம் இருந்து தான் நாங்கள் தாவா சொத்தை வாங்கினோம் என்பதற்கு எந்த ஆவணமும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை ஆகவே தாவா சொத்து ராஜம்மாள் நகரின் மனைபிரிவு இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி சுந்தர் என்பவரிடம் இருந்து வாங்கிய பட்டா நிலம் 2000 சதுர அடி தவிர 18.5 சென்டு நிலத்தை பதியப்படாத கிரைய ஆவணம் மூலம் வாங்கி அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. நான் சாலைக்காக எனது இடத்தை கொடுத்து விட்டு அந்த இடத்திற்கு மாறாக

பிரதிவாதியின் சுவாதினத்தில் இருக்கும் இடத்தை ஆக்கிரமிப்பு செய்யும் நோக்கத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

7) பிரதிவாதி வழக்கு சொத்திற்கு தெற்கு பக்கத்தில் இருப்பதை மறைத்து கெட்ட நோக்கத்தோடு இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ3 ,4 பட்டா சிட்டா மற்றும் அடங்கல் உண்மையானது என்பதை உரிய வழியின் மூலமாக வட்டாசியர் அலுவலகத்தில் இருந்து அசல் ஆவணங்கள் மூலம் நிருபிக்க நான் தயாராக உள்ளேன். 25.02.2013 அன்று வழக்கு மூலத்தில் சொல்லப்படுகிற பிரதிவாதிகள் அத்துமீறி நுழைந்தார்கள் என்பதற்கோ காவல் நிலையத்தில் அது பற்றி தெரிவித்ததற்கோ உண்டான ஆவணம் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

8) ரூபாய் 100க்கு மேல் மதிப்புடைய அசையா சொத்துகளை பதியப்படாத ஆவணம் மூலம் உரிமை மாற்றம் ' செய்ய இயலாது என்ற விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்து ஜெயவேலுக்கோ அவரது குடும்பத்திற்கோ சொந்தமான நிலம் அல்ல என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.16/1 அயப்பாக்கம் ஏரி புறம் போக்கு நிலம் என்று சொன்னால் சரியல்ல. தாவா வாதுரையில் குறிப்பிட்டுள்ள 25.02.2013 அன்று பிரதிவாதிகள் அத்துமீற முயற்ச்சித்ததாக நான் சொல்வது வழக்கிற்காக சொல்லும் பொய் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு நான் உரிமையாளர் அல்ல என்று சொன்னாலும் தாவா சொத்தில் ' நான் சுவாதினத்தில் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. பிரதிவாதி குறைந்த விலைக்கு தாவா சொத்தை வாங்க என்றும் முயற்ச்சிக்கவில்லை பிரதிவாதியை எங்களது சொத்தை வாங்க நாங்கள் தான் அனுகினோம் அவர் மறுத்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ 1 முதல் 4 வரை உள்ள ஆணவங்கள் உண்மையானது இல்லை வழக்கிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்கான எந்த முகாந்திரமும் இல்லாமல் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது. மறு விசாரணை இல்லை.